செ.வெ.எண்-18 நாள்-13.11.2018

# அரியலூர் மாவட்டத்தில் கல்வித்துறையின் சார்பில் 2019 ஆண்டு 12ஆம் வகுப்பு பொதுத்தேர்விற்கான முதுகலை ஆசிரியர்களுக்கு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கல்வித்துறையின் சார்பில் அரியலூர், செந்துறை, உடையார்பாளையம் ஆகிய கல்வி மாவட்டத்தைச் சார்ந்த 12ஆம் வகுப்பு கற்பிக்கும் முதுகலை உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதம் மற்றும் கணினி அறிவியல் பாட முதுகலை ஆசிரியர்களுக்கு தேர்ச்சி சதவீதம் பகுப்பாய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (13.11.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் வருகின்ற மார்ச் 2019 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்தும் பொருட்டு 12ஆம் வகுப்பு கற்பிக்கும் முதுகலை உயிரியல், வேதியியல், இயற்பியல், கணிதம் மற்றும் கணினி அறிவியல் போன்ற 250 ஆசிரியர்களுக்கு தேர்ச்சி சதவீதம் பகுப்பாய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேலும், மாணவ, மாணவியர்களை வருகின்ற மார்ச் 2019 பொதுத்தேர்வில் அனைத்து பாடங்களிலும் அதிக மதிப்பெண்களை பெற ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.புகழேந்தி, அரியலூர், செந்துறை, உடையார்பாளையம் மாவட்ட கல்வி அலுவலர்கள், நேர்முக உதவியாளர், பள்ளித்துறை ஆய்வாளர் பழனிசாமி, ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**